**தோட்டக்கலை துறை இயக்குநர், சென்னை–51 அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு.இரா. மகேந்திரகுமார், பி.எஸ்.ஸி(தோ)**

**செ.மு.ஆணை எண். அ/844/2020** நாள். 02.09.2021

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (நேரடித் தேர்வு) – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV- ன் மூலம் 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண் துறைக்கு ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர் தோட்டக்கலைத்துறைக்கு பணி நியமனம் வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்தது – பணி நியமனம் வழங்கி ஆணையிட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை: இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களின் செமு ஆ.எண்.அபபி2/5391/2020, நாள்.07.08.2020

********

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தற்காலிகமாக தெரிந்தெடுக்கப்பட்டு பார்வையில் காணும் செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலகத்திற்கு பணி நியமனம் வழங்கப்பட்ட பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வஎண் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய பட்டியல் வரிசை எண். | பணியாளர்கள் பெயர் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 58 | ப்பி.நித்யா, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) | 13.08.2020 முற்பகல் | 13.08.2020 முற்பகல் |
| 2 | 97 | நா.சக்தி, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) | 14.08.2020 முற்பகல் | 14.08.2020 முற்பகல் |

இப்பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம், சென்னை/மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது. (“ This Regularization is subject to the outcome of WP’s pending on the files of the Hon’ble High Court of Madras/Madurai Branch of the Hon’ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination Group-IV for the year 2018-2019 and 2019-2020 recruitment’)

மேற்காணும் பணியாளர்கள் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்து, இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிட்ட பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார் என தெரிவிக்கப்படுகிறது.

2.9.21

தோட்டக்கலை துணை இயக்குநர்
மாதவரம், சென்னை–51.

02/09/21

பெறுநர்

1) திருமதி.ப.நித்யா, இளநிலை உதவியாளர்(பிணையமற்றது)
2) செல்வி.நா.சக்தி, இளநிலை உதவியாளர்(பிணையமற்றது)

நகல் – பணிப்பதிவேடு
நகல் – இருப்புக்கோப்பு

நகல் – இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.